1974 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தனிப்பட்ட விவசாயிகள் யாரும் டீசல் எஞ்சின் வாங்கி வைத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. அப்படி வாங்கிக் கொள்வதன் மூலமாக கடன் கொடுக்கும்போது சற்றுக் காலதாமதமாகிறது. டீசல் எஞ்சினை சொந்தமாக வாங்கி வைத்துக்கொண்டு அந்தப் பம்புகளை இயக்குவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

Agro-Industries Corporation aid for fisheries

* 541 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the financial assistance offered by the Tamil Nadu Agro-Industries Corporation towards the development of fisheries in the State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: நிதி உதவி எதுவும் செய்யவில்லை.

செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டம்

* 542 **வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:**
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் மாடுகள் வைத்துள்ளவர்களின் வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்புப் பணி செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனுர்: (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த இனவிருத்தி முறை தற்போது சென்னை மாநகரத்திலே மட்டுந்தான் நடைமுறைப் படுத்தப்படுவது எந்த அளவுக்கு வெற்றி பெற்று வருகிறது? மாவட்ட அளவில் எப்போது விரிவுபடுத்தப்படும்?

@ 213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 21

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நேற்றுகூட மாண்புமிகு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். ஆர்டிபிஷியல் இன்செமினேஷனுக்கு ஒரு மொபைல் வான் அவசியமாகத் தேவை என்று தொடங்கி இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. எப்போது என்று என்றால் இப்போது செல்ல முடியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: முதலில் கீ வில்லேஜ் சென்டர் மூலம் ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் முறை செயல்பட்டு வந்தது. இப்போது டிப்பார்ட்மென்ட் மூலமாக அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியனின் கீழ் இருந்து செய்கிறார்கள். முன்பைவிட இப்போது மோசமான நிலைமையில் இருப்பதால் பழைய கீ வில்லேஜ் சென்டரையே ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முடியுமா என்று ஆலோசித்துப் பார்க்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: செயற்கை முறையில் கரு தரிப்பதில் ஃபெய்ல்யூர்ஸ் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். செமனைச் சேகரித்து இன்னொரு இடத்திற்கு சைக்கிளில் எடுத்துச் செல்லுவதால் பொட்டன்சி போய்விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர்க்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஃபெய்ல்யூர்ஸ் ஏற்பட்டிருக்கக்கூடும். எவ்வளவு ஃபெய்ல்யூர்ஸ் என்ற கணக்கு இல்லை. ஆகவேதான் மொபைல் வான் மூலமாக இப்போது எடுத்துச் செல்லப்படுகிறது. சர்ஜன்கள், லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட்ஸ் கூடச் செல்கிறார்கள். இப்போது நல்ல முறையில் செயல்பட்டு வருவதாகத் தகவல் இருக்கிறது.

திரு. எம். முத்தையா: செயற்கை முறையில் பிறக்கும் கன்றுகள் இறந்துவிடுவதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கன்றுகள் ஒருவேளை இறந்துவிடலாம். பால் கறக்கிறவர்கள் கன்றுக்குப் பால் விடாமல் இறந்து விடுகின்றன என்பது கேள்விக்குரிய காரியமாக இருக்கிறது.

1974 மார்ச் 21]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1973-ம் ஆண்டிலிருந்து இதுவரை எத்தனை மாடுகளுக்கு சென்னை மாநகரில் இந்த முறை கையாளப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கைவசம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, we find it very difficult to store semen. So, may I know from the Hon. Minister whether he will make arrangements to de-freeze the semen so that more semen can be stored and distributed to semen banks and key village centres?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : செமனை ப்ரீஸ் பண்ணினாலும் கூட நீண்ட காலம் தாங்குவதில்லை. அதையும் நாம் தயார் செய்து வெகு சீக்கிரமாகப் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திட்டத்தை விரிவாக்கும் முறையில் வெளிநாட்டிலிருந்து காளைகள் வரவழைக்கப் படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த போதுமான புல்ஸ்—காளைகள் ஏற்கனவே நமது ஹோசூர் பண்ணையில் இருக்கின்றன.

திருச்சிராப்பள்ளியில் புதிய சாலை.

* 543 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரத்தில், தில்லைநகர், தென்னூர் முக்கிய சாலையை இணைக்கும் சாலைக்கு தியாகி சாமிநாத சாஸ்திரி சாலை எனப் பெயரிட தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றி அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?